THIRU N. K. PALANISWAMY: Sir, may I know whether the Board is functioning and if so, whether its recommendations are advisory or mandatory?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த வாரியத்தைப் பொறுத்தவரையில் ஆலோசனை என்ற முறையில் தான் வழங்கி வருகிறது. ஆனால் இரு சாராரும் அதை நிறைவேற்ற வேண்டுமென்ற தன்மையின் அடிப்படையில் அது நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஓரளவுக்கு நல்ல முறையில் அது பணியாற்றி வருகிறது.

உயர்நிலைப் பள்ளிப் பாடத்திட்டம்.

*52. வினா—**திரு. சு. துரைசாமி:**
திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிப் பாடத் திட்டத்தில் மாறுதல் செய்வதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 6–8 வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்ட வரைவு அரசிதழில் 1972 சனவரியில் வெளியிடப்பட்டது. ஆறும் வகுப்பில் 1973-74 முதல் மொழிகள், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களுக்கான புதிய பாடத் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. ஆறும் வகுப்பில் பிற பாடங்களுக்கும் 7–8 வகுப்புகளுக்கும் புதிய பாடத் திட்டம் எவ்வாண்டு முதல் நடைமுறைக்கு வரும் என்பதுகுறித்து இன்னும் இறுதியாக முடிவு செய்யவில்லை. 9—11 வகுப்புகளுக்கான புதிய பாடத் திட்ட வரைவு விரைவில் வெளியிடப்படும். பள்ளிக் கல்வி 11 ஆண்டு ஆக இருக்க வேண்டுமா அல்லது 10 ஆண்டு ஆக இருக்க வேண்டுமா என்று முடிவு செய்த பின்னரே இதுகுறித்து நடவடிக்கை எடுக்க இயலும்.

1973 ஆகஸ்ட் 7]

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, மாணவர்களுக்கு பாடத் திட்ட வகுப்பில், அவர்களுடைய தேர்வு எண்களை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், அவர்களுடைய விளையாட்டுத் திறன், பள்ளிக்கு வரும் நாட்கள், அவர்களுடைய ஒழுக்கம் ஆகியவற்றையும் கணக்கில் எடுத்தால் மாணவர்கள் மத்தியில் கட்டுப்பாடு வளரும் வாய்ப்பு ஏற்படும். அப்படிப்பட்ட முயற்சிக்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற கருத்தை ஏற்றுக்கொள்கிற முறையில்தான் 'அக மதிப்பீட்டுத் திட்டம்' என்ற ஒன்றை இவ்வாண்டிலிருந்து புகுத்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 20-25 உயர்நிலைப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றில் ஏற்கெனவே தரும் 600 மார்க்குகளுக்கு மேல் மேலும் 200 மார்க்கு வைத்து, அதை 50 சதவிகிதம் கேம்ஸ் அண்டு ஸ்போர்ட்ஸ், 50 சதவிகிதம் லைப்ரரி ரீடிங், 50 சதவிகிதம் கான்டக்ட் அண்டு காரக்டர், 50 சதவிகிதம் ரைட்டிங் மற்றவைகள் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த வகையில் 'அக மதிப்பீட்டு முறை' ஒவ்வொரு மாவட்டத்திலும் 25 பள்ளிகளில் மேற்கொள்ளப்படுவதால், அது சிறந்த வெற்றி தேடித் தந்தால் அதை வேறு பள்ளிகளிலும் விஸ்தரிக்க அரசு எண்ணியுள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, frequent changes in syllabi lead to deterioration in standards of education. Moreover, the supply of text-books became difficult. Once the syllabi are prepared, they should continue for at least 10 years. So, may I know whether the present syllabi which are being framed, will continue for a good number of years?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பாட திட்டங்களிலே காலத்திற்கு ஏற்ற முறையில் மாற்றங்கள் தேவை என்ற கருத்து பல்வேறு வகையில் வல்லுநர்களால் எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. கோத்தாரி கமிஷன் அது பற்றிக் கருத்துக்களை வெளியிட்டு இருக்கிறது. அதை ஒட்டி வல்லுநர்கள் குழு அமைக்கப்பட்டு, நாட்டுக்கும், அவர்களுடைய எதிர்கால வாழ்க்கைக்கும் உதவும் அடிப்படையில் பாடத் திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அடிப்படையிலிருந்து

வந்தால்தான் கல்லூரிக் கல்வி நல்ல விதத்தில் அமையும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் அந்த மாற்றம் தேவைப்படுகிறது. அந்தப் பாடங்களைப் புகுத்துவதற்கு 4–5 ஆண்டுகள் ஆகும். அதை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு 5-6 ஆண்டுகள் ஆகும். கூடியவரையில் நல்ல திட்டமாக இருந்தால் அதை நீடித்து வைத்திருக்க வேண்டுமென்று அரசு எண்ணம் கொண்டிருக்கிறது.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, பாடத் திட்டங்களில் மத சம்பந்தமான பாடத் திட்டங்களைப் புகுத்துவது போல் பகுத்தறிவு சம்பந்தமான பாடத் திட்டங்களையும் புகுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பாடங்களில் பகுத்தறிவு எல்லா வகையிலும் இருக்க வேண்டுமென்பதுதான் அரசின் எண்ணம். அறிவு வளர்ச்சிப் பாடங்கள் பகுத்தறிவின் அடிப்படையில் புகுத்தப்படுகிறது. பகுத்தறிவுக் கருத்துக்கள் பல்வேறு வகைகளில் வரும். அந்தக் கருத்துக்கள் அதை எடுத்துச் சொன்னவரின் தன்மையைப் பொறுத்து இருக்கும். ஆகவே, பாடத் திட்டத்தில்தான் அவைகள் வரவேண்டுமென்று இல்லை. எப்படிப்பட்ட பாட திட்டங்களை வைத்தால் மாணவர்களின் பொது அறிவு, நுண்ணறிவு வளரும், அவர்களுடைய பண்பாடுகள் செம்மைப்படும் என்று கண்டறிந்து அந்த வகையில் பாடத் திட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவரவர்களே, உயர் வகுப்பில் இருக்கும் 'செமஸ்டர் சிஸ்டத்தை', ஆரம்ப, உயர்நிலைப் பள்ளிகளில் கொண்டுவர அரசு வழிவகுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைத் தொழில் கல்லூரிகளில்தான் இப்போது புகுத்தியிருக்கிறோம். அதைக் கல்லூரிகளில் கொண்டு வந்து, அதிலே வெற்றி கண்ட பிறகு வேண்டுமானால், உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கொண்டுவந்து, பிறகு துவக்கப் பள்ளிகளுக்குக் கொண்டு வரலாம். கல்லூரிகளில் இப்போது கொண்டுவந்திருக்கும் முறை வெற்றிகரமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அங்கே வெற்றியடைந்தால் பிறகு பள்ளிகளுக்குக் கொண்டுவரலாம்.

1973 ஆகஸ்ட் 7]

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, உயர்நிலைப்பள்ளித் தேர்வு பெறுவதற்கு முன்பே சிலர் குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதிலே பலர் பொறுப்பு இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, 9-வது வகுப்பிலிருந்தே பொது அறிவு போதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பாடத் திட்டங்களிலே மாணவர்களின் பொது அறிவு, நுண்ணறிவு வளரத்தக்க அளவுக்குப் பாடங்கள் புகுத்தப்பட்டு இருக்கின்றன. பொதுவாக, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிப் பாடங்களில் அப்படிப்பட்ட கருத்துக்கள் அடங்கிய பாடங்கள் சேர்க்கப்பட்டு இருக்கின்றன.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, இப்போது இருக்கிற பாடத் திட்டங்களிலே 'சிடிசன்சிப் டிரெயினிங்' பாடப் பிரிவு புகுத்தப்பட்டிருக்கிறதா? நாட்டிலே அவர்கள் பொது வாழ்வில், பொது இடத்தில் எப்படி நடந்துகொள்வது, 'ரோட்'டில் நடப்பது எப்படி, பொது இடத்தை எப்படிச் சுத்தமாக வைத்துக் கொள்வது, அவர்கள் எப்படிச் சுத்தமாக இருப்பது என்பது போன்றவற்றையும் பயிற்சி அளிக்கும் வகையில் பாடத் திட்டங்கள் வைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட போதனைகள் பாடத் திட்டங்களில் புகுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அதற்கு என்று தனியாகப் பிரிவு இருக்கிறதா என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் கேட்டறிந்து பதில் சொல்லலாம்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, பாடத் திட்டங்கள் அடிக்கடி மாற்றப்படுவதால், ஏழை மாணவர்கள் பழைய புத்தகங்களை வாங்கிப் படிக்க முடியாமல் போய் விடுகிறது. முடிந்த வரையில் பாடத் திட்டங்களை மாற்றாமல் இருக்க வேண்டும். விஞ்ஞானம் போன்ற பாடங்களில் தேவைப்படும்போது மாற்றம் செய்யலாம். ஆனால் சரித்திரம் பூகோளம் போன்ற பாடங்களில் அடிக்கடி மாற்றம் செய்யாமல் இருந்தால், ஏழை மாணவர்கள் பழைய புத்தகங்களை வாங்கிப் படிக்கும் நிலையேற்படும். அந்த முறையை மேற்கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பாடத் திட்டங்கள் 1965 ஆம் ஆண்டிலே மாற்றப்பட்டதுதான். அதன் பிறகு ஓரளவிற்கு மாற்றப்பட வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கப்பட்டதால், 7-8 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது மாற்றம் கொண்டுவந்திருக்கிறோம். குறைந்தது ஒரு பாடப் புத்தகம் 10 ஆண்டுகாலத்திற்கு இருக்க வேண்டுமென்ற எண்ணத்தைத்தான் அரசு கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மதர்ஸே ஆஸம் உயர்நிலைப் பள்ளியில் அரபு மொழி ஆசிரியர் பதவி

*53 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அண்ணா சாலையில் உள்ள மதர்ஸே ஆஸம் என்ற அரசினர் உயர்நிலைப்பள்ளியில் அரபு மொழி ஆசிரியர் பதவி எவ்வளவு நாட்களாகக் காலியாக உள்ளது?

(இ) அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இந்தக் கல்வி ஆண்டில் மார்ச் 11 ஆம் தேதி இப்பள்ளியில் பணியாற்றி வந்த முதல் நிலை அரபு மொழி ஆசிரியர் இயற்கை எய்தியதை யொட்டி அப்பதவி காலியாக இருந்து அக்டோபர் மாதத்தில் நிரப்பப்பட்டுள்ளது.

(இ) வேலை தேடித்தரும் அலுவலகத்தாரால் தகுதி வாய்ந்த அரபு மொழி ஆசிரியர் ஒருவரை உடனடியாக அனுப்ப இயலாத காரணத்தால் இப்பதவியை நிரப்புவதில் தாமதம் ஏற்பட்டது. பின்னர் அத்தகுதியில் ஓரளவு குறைவான ஒருவரின் பெயர் அனுப்பப்பட்டு அக்டோபர் இறுதியில் தற்காலிகமாக இரண்டாம் நிலை அரபு மொழி ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, இந்த அரபு மொழி ஆசிரியர்கள் பதவி காலியாகும்பொழுது நிரப்பப் படுவதில்லை என்று தமிழகத்தில் ஒரு குறை இருக்கிறது. உதாரணமாக செங்கோட்டையில் 5 அரபு மொழி ஆசிரியர்கள்